செ.வெ.எண்: 18 நாள்: 09.07.2016

## பத்திரிக்கை செய்தி

## அனைவருக்கும் வீட்டு வசதி திட்டம் (மத்திய துறை திட்டம்)

## புதுக்கோட்டை மாவட்டம்.

நகர்ப்புற மேம்பாட்டிற்காக மாவட்ட அளவிலான ஏழை மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் குடும்பங்களுக்கு மத்திய அரசால் அனைவருக்கும் வீட்டு வசதி வழங்கும் பொருட்டு "பாரத பிரதமரின் வீட்டு வசதி திட்டம்" மாநகராட்சி/நகராட்சியில் செயல்படுத்த தகுதி வாய்ந்த பயனாளிகளிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகிறது.

மேற்கூறிய திட்டத்தின் 4 உட்கூறுகளில் ஒன்றான "கடனுடன் இணைக்கப்பட்ட மான்ய திட்டம்" (Credit Linked Subsidy Scheme) அடிப்படையில் வீடு வழங்கும் திட்டம் மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 3 இலட்சத்திற்கு குறைவான வருவாய் உள்ள பிரிவினருக்கு 6.5% க்கு மேற்படும் வட்டிக்கு மான்யத்துடன் அதிகப்படியாக 30 ச.மீ (323 ச.அ) பரப்பளவு கொண்ட EWS வீடும் 3 முதல் 6 லட்சம் வரை வருவாய் உள்ள பிரிவினருக்கு 6.5% க்கு மேற்படும் வட்டிக்கு மான்யத்துடன் அதிகபட்சம் 60 ச.மீ (646 ச.அ) பரப்பளவு கொண்ட LIG வீடு வழங்க உத்தேசித்துள்ளது.

இம்மாவட்டத்தில் உள்ள மாநகராட்சி/நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் தகுதியுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட மாநகராட்சி/நகராட்சி ஆணையரை தொடர்பு கொண்டு உரிய படிவத்தில் குறிக்கப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பித்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு இம்மாவட்ட வலைதளத்தில் காண்க.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**